செய்தி வெளியீடு எண். 27-2018 நாள்: 15.05.2018

## விழுப்புரம் மாவட்ட தொழில் மையத்தின் சார்பாக தொழில் தொடங்க, மானித்துடன் கூடிய கடனுதவி பெற தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

******

தொழில் வணிகத்துறையின் கீழ் இயங்கும் விழுப்புரம் மாவட்ட தொழில் மையம் படித்த இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பை ஏற்படுத்தி தரவும், தொழில் முனைவோருக்கு தொழில் தொடங்க ஒரு வழிகாட்டி மையமாக செயல்பட்டு வருகிறது. விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை இணையதளம் மூலம் பதிவு செய்து தேவையான உதவிகளையும் செய்து வருகிறது.

படித்த இளைஞர்களை முதல் தலைமுறை தொழில் முனைவோராக உருவாக்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின் பேரில் 2012-13 முதல் செயல்பட்டு கொண்டிருக்கும் திட்டமே புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS) ஆகும். இத்திட்டத்தில் படித்த இளைஞர்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சி, திட்ட அறிக்கை தயார் செய்தல், நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெற வசதி செய்தல் மற்றும் பெரும் தொழில் நிறுவனங்களுடன் தொடர்பு ஏற்படுத்தி தருதல் ஆகிய உதவிகளை செய்து வருகிறது. மேலும் பயிற்சிக்கு பிறகு வங்கிகள்/ நிதி நிறுவனங்களிடமிருந்து 25 சதவீதம் மான்யத்துடன் (ரூ.25 இலட்சத்திற்கு மிகாமல்) கூடிய கடனுதவி பெறவும் 3 சதவீதம் பின்முனை வட்டி மான்யம் பெறவும் வழிவகை செய்யப்படுகிறது. இத்திட்டத்தில் 50 விழுக்காடு மகளிருக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் தகுதிகளாக வயது பொது பிரிவினர் குறைந்த பட்சம் 21 முதல் அதிகபட்சமாக 35 வரை இருக்கலாம். சிறப்பு பிரிவினர் (SC/ ST/ மகளிர்/ மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/ சிறுபான்மையினர்/ முன்னாள் இராணுவத்தினர்/ மாற்றுத்திறனாளிகள்/ திருநங்கையர்) ஆகியோர் அதிகபட்சம் 45 வயது வரை இருக்கலாம். கல்வி தகுதி அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் பட்டப்படிப்பு/ பட்டயப்படிப்பு/ தொழிற்கல்வி படிப்பு முடித்தவர்கள். இருப்பிடம் விண்ணப்பதாரர் குறைந்த பட்சம் 3 ஆண்டுகள் தமிழ்நாட்டில் வசிப்பவராக இருந்தால் போதுமானது. தற்போது, இத்திட்டத்தில் குறைந்த பட்ச திட்ட மதிப்பீடு ரூ.10.00 இலட்சமாகவும் மற்றும் அதிகபட்ச திட்ட மதிப்பீடு ரூ.500 லட்சம் வரை கடன் வழங்க தமிழக அரசு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அரசு மான்யம் 25% அதிகபட்சமாக ரூ.25 லட்சம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் அனைத்து இலாபகரமான உற்பத்தி மற்றும் சேவை தொழில்கள், சுற்றுப்புற சூழலுக்கு நன்மை பயக்கு தொழில்கள், திறன் காக்கும் தொழில்கள் மற்றும் ஏற்றுமதி தொழில்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இத்திட்டத்தில், SC/ ST/ மகளிர் பிரிவினருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

விழுப்புரம் மாவட்டத்தில் (2017-18), ஆண்டிற்கு 37 நபர்களுக்கு ரூ.370 இலட்சம் மான்யம் இலக்காக நிர்ணயிக்கப்பட்டு, மாவட்டத்திலுள்ள வங்கிகளுக்கும்/ தொழில் முதலீட்டு கழகத்திற்கும் 50 விண்ணப்பங்கள் ரூ.427.63 இலட்சம் மான்யத்திற்கு மாவட்ட ஆட்சியர் தலைமையிலான தேர்வு குழு மூலம் பரிந்துரைக்கப்பட்டதில், வங்கிகள் மூலம் 25 நபர்களுக்கு ரூ.254.31 இலட்சம் வரை வங்கிகள் ஒப்பளிப்பு செய்யப்பட்ட ரூ.1282.46 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் தொழில் தொடங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் பெட் பாட்டில் தயாரித்தல், டிஜிட்டல் பிரிண்டிங், சென்டரிங் ஷீட், ஐஸ் க்ரீம் உற்பத்தி, ப்ளாஸ்டிக் காம்போனண்ட்ஸ் உற்பத்தி, உணவகம், லேசர் கட்டிங், அலுமினிய பாத்திரம் தயாரித்தல், மரச்சாமான்கள் தயாரித்தல் போன்ற தொழில்கள் தொடங்கப்பட்டுள்ளன.

மேலும், இந்த ஆண்டிற்கு (2018-19) 37 நபர்களுக்கு ரூ.370 இலட்சம் மான்யம் இலக்காக இம்மாவட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எனவே, இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்புவோர் விண்ணப்பங்களை www.msmeonline.tn.gov.in இணைய வலைதளம் மூலம் விண்ணப்பிக்கலாம் என்றும், மேலும் விவரங்களுக்கு பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம், விழுப்புரம் அவர்களை நேரடியாகவோ அல்லது தொலைபேசி எண் 04146-226602 மூலம் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.